**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்**
**நீதிமன்றம், நத்தம்.**
**முன்னிலை : திருமதி.J.ஆ:ஃப்ரீன் பேகம், M.Com., L.L.M.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நத்தம்.**

**2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 20ம் நாள் திங்கட்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம், ஆடி திங்கள் 04ம் நாள்**
**குற்ற பல்வகை மனு எண்.515/2026**

செல்வபிரகாஷ் 26/2026
த/பெ.கண்ணன்,
வடக்குத்தெரு, செட்டிகுளம்,
நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். .. மனுதாரர்/ எதிரி

// எதிர் //

காவல் சார்பு ஆய்வாளர்,
நத்தம் காவல் நிலையம்,
குற்ற எண்.438/2026
சட்டப்பிரிவுகள் 20(b)(ii)(A), 8(c) NDPS Act. .. எதிர்மனுதாரர் / புகார்தாரர்

**எதிரி காவல்படுத்தப்பட்ட நாள் 15.07.2026**

நீதிமன்றக் காவலில் உள்ள எதிரியை பிணையில் விடுவிக்கக் கோரி எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.S.அர்ஜீன் அவர்கள் 480 BNSSன் படி இப்பிணை மனுவினைத் தாக்கல் செய்துள்ளார்.

இப்பிணை மனு இன்று என் முன்னர் விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை –I திருமதி.P.அமர்ஜோதி அவர்களும் மனுதாரர் / எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.S.அர்ஜீன் அவர்களும் நேரில் ஆஜராகி வாதிட்டதைக் கேட்டறிந்தும், வழக்கின் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

1) மனுதாரர் / எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றம் சட்டப்பிரிவுகள் 20(b)(ii)(A), 8(c) NDPS Act.

2) மனுதாரர்/ எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்குரைஞர் அவர் தரப்பு வாதத்தில் எதிரி நீதிமன்றம் பிறப்பிக்கும் நிபந்தனைகளை பின்பற்றி நடக்க மனுதாரர் தயாராக இருப்பதாகவும், மனுதாரரை பிணையில் விடுவிக்கவேண்டியது அவசியம் என வாதிடப்பட்டுள்ளது.

3) வழக்கு ஆவணங்கள் யாவும் இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலினை செய்யப்பட்டது. எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளானது சட்டப்பிரிவுகள் 20(b)(ii)(A), 8(c)NDPS Actன் படியான குற்றமாகும். மனுதாரர் / எதிரி கடந்த

15.07.2026ம் தேதி முதல் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும், எதிரியின் குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டும், மேலும், பிணையில் விடுவிக்கக்கூடிய குற்றம் என்பதாலும், மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டதைக் கருத்தில் கொண்டும், கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனுதாரருக்கு பிணை வழங்கி உத்தரவிடப்படுகிறது.

1 எதிரி தனக்காக ரூ.10,000/–க்கு பிணைப் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும். அதே தொகைக்கு மனுதாரர் / எதிரியின் உறவினர்கள் அல்லது நண்பர்கள் இருவர் பிணை பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும். பிணையதாரர்கள் பிணை பத்திரத்தில் அவர்களது சமீபத்திய புகைப்படத்தினை ஒட்ட வேண்டும். மேலும் பிணையதாரர்களின் ஆதார் கார்டு அல்லது அவர்களது அடையாளத்தை காட்டக் கூடிய வேறு அடையாள அட்டைகளின் புகைப்பட நகலினை தாக்கல் செய்ய வேண்டும்.

2 மேலும் எதிரி நீதிமன்றக் காவலில் இருந்து வெளியில் வந்த மறுநாள் முதல் 10 நாட்களுக்கு காலை 10.00 மணிக்கு எதிர்மனுதாரர் காவல்நிலையத்தில் நேரில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும்,

3 மனுதாரர் / எதிரி எவ்வகையிலும், புலன் விசாரணைக்கோ, இவ்வழக்கின் விசாரணைக்கோ, இடையூறு செய்யக் கூடாது.

4 மேற்படி நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் மாண்பமிகு உச்ச நீதிமன்றம் P.K.Shaji //Versus// State of Kerala 2005 AIR S.C.W 5560 என்ற முன்தீர்ப்பின்படி இந்நீதிமன்றமோ, அல்லது விசாரணை நீதிமன்றமோ, மனுதாரர் மீது சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளும் என்றும்

5 மனுதாரர் / எதிரி ஜாமீனில் இருந்து வெளியில் வந்து, வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாகினால், மேற்படியார் மீது பிரிவு 269 of BNS ன் கீழ் புதிய முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய நேரிடும்

2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 20ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.07.20 18:21:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், நத்தம்.